# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## S.C. NO.107/2014

**05.09.2023 - அ.சா. 2 பச்சையம்மாள் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் மகன் பிரபு வீடு பள்ளிகூடத் தெருவில் உள்ளது. அ.சா.1 பாபு வீடு முருகன் கோயில் தெருவில் இருந்து மேற்கு போகும் சந்தில் உள்ளது. வீராசாமி வீடு முருகன் கோயில் தெருவில் உள்ளது. பள்ளிக்கூடத் தெரு கிழக்கு மேற்கு தெரு என்று சொன்னால் சரிதான். பள்ளிக்கூடத் தெருவில் இருந்து பிரிந்து தெற்கு புறமாக செல்வது தான் முருகன் கோயில் தெரு என்றால் சரிதான். பிரபு வீட்டில் இருந்து 10 அடி மேற்கு புறமாக சென்று அந்த தெருவிற்கு தென்புறமாக முருகன் கோயில் தெரு அமைந்துள்ளது என்று சொன்னால் கோயில் எங்கள் வீட்டிற்கு மேற்கால் அமைந்துள்ளது. அந்த கோயில் பிரபு வீட்டில் இருந்து 10 அடி தூரத்தில் அமைந்துள்ளது.

பிரபு வீட்டிற்கும் வீராசாமி வீட்டிற்கும் இடையே சங்கர் மற்றும் குமாரி ஆகியோர் வீடு உள்ளது. சங்கர் வீட்டிற்கும், பிரபு வீட்டிற்கு இடையே பள்ளிக்கூடத் தெரு செல்கிறது. நான் பிரபு வீட்டு திண்ணையில் உட்கார்ந்து கொண்டு இருந்தேன். என் மருமகள் சரளா முருகன் கோயில் அருகே பாபு வீட்டில் இருந்தார். நானும் என் மருமகளும் திண்ணையிலேயே உட்கார்ந்து கொண்டு இருந்தோம். நான் என் சின்னமகன் வீட்டில் உட்கார்ந்து கொண்டு இருந்தேன். நான் உட்கார்ந்து இருந்த இடத்தில் இருந்து வீராசாமி வீடு தெரியும். நான் உட்கார்ந்த இடத்தில் இருந்து சங்கர் மற்றும் குமாரி வீடுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

என் பேரக்குழந்தை அழும் சத்தம் கேட்டு நான் ஓடினேன். என் மருமகள் ஒரே நிமிடத்தில் வீட்டில் இருந்து ஓடிவந்து விட்டார். நான் என் மகன் பாபுவிடம் யார் குத்தினார்கள் என்று கேட்கவில்லையா என்றால் எதிரி என்னையும் என் கணவரையும் குத்திவிடுவதாக கத்தியை சுழற்றிக் கொண்டு இருந்தார். நான் என் மகனை பார்த்த போது தூக்கும் போது உயிர் இல்லை. போலீசார் அன்றைய தினம் என்னை விசாரிக்கவில்லை மறுநாள் விசாரித்தார்கள். சம்பவம் நடந்தது சித்ரா பவுர்ணமி என்று போலீசார் விசாரணையில் சொன்னேன். நான் சத்தம் கேட்டு சென்று பார்த்த போது என் மகன் பிரபு கையில் வைத்திருந்த குழந்தையை தூர வீசி எறிந்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மகனை சென்று

எந்தெந்த இடத்தில் கத்தி குத்து விழுந்தது என்றால் ரத்தம் அதிகமாக போனதால் குத்து விழுந்த இடத்தை பார்க்கவில்லை.

வலது கழுத்து, இடது பக்க கழுத்து ஆகிய இடங்களில் குத்தியதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எனக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் போட்ட சத்தத்தை கேட்டு ஊர் ஜனங்கள் வந்தார்கள் என்று போலீசில் சொல்லவில்லை என்றால் சொன்னேன். எதிரி அண்ணாமலையும், மாணிக்கமும் என்னை குத்தாமல் விடமாட்டேன் என்று கூறிய விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். என் மருமகள் சரளாவிற்கும், குணசேகரனுக்கும் பேச்சு வார்த்தை இருந்தது என்று சொன்னால் சரியல்ல. என் மகன் பாபு அடிக்கடி கண்டிப்பார் என்று சொன்னால் சரியல்ல. என் மருமகள் தெய்வம்.

என் குடும்பத்தாருக்கும், எதிரிகள் குடும்பத்தாருக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு முடிந்து விட்டது. அதன் பிறகு எங்கள் இரு குடும்பத்தாருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. அ.சா.1 என் கணவர். கோபால் மனைவி மலர்கொடியை எனக்கு தெரியாது. மலர்கொடியை என் கணவரும், இறந்து போன மகன் பாபு மற்றும் மற்ற பிள்ளைகள் மீது வழக்கு போட்டு இருந்தார்கள் என்றால் சரியல்ல. மலர்கொடியை அடையாளம் தெரியாத அளவிற்கு நெருப்பு வைத்து கொளுத்திவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த கொலை சம்மந்தமாக போலீசார் எங்களை அழைத்து சென்று விசாரித்தார்கள் என்றால் சரியல்ல.

இறந்து போன பாபு கூடலூரை சேர்ந்த ஒரு பெரியவர் மீது இரு சக்கர வாகனத்தை மோதி பலத்த காயம் ஏற்படுத்தி விட்டார் என்றால் சரியல்ல. என் மகன் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியும். நான் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/- பச்சையம்மாள்

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## S.C. NO.107/2014

**05.09.2023 - அ.சா. 3 சரளா மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என் வீட்டிற்குள் சமையல் அறை உள்ளது. அங்கு தான் நான் சமையல் செய்து கொண்டு இருந்தேன். அந்த வீடு பள்ளிகூடத் தெருவில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. அது முருகன் கோயில் தெருவில் உள்ளது. பிரபு என்பவர் என் மைத்துனர். பிரபு வீட்டில் சமையல் அறை உள்ளதா என்று எனக்கு தெரியாது. நான் என் வீட்டில் இருந்தேன். பிரபு வீட்டில் இருந்து வீராசாமி வீட்டை பார்க்கமுடியாது ஏனென்றால் இடையில் இரண்டு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். நான் சென்ற பிறகு ஊர் ஜனம் வந்தார்கள். கங்கா, சிரஞ்சீவி ஆகியோர்கள் கத்திய சத்தத்தை கேட்டும், என் குழந்தை அழும் சத்தத்தை கேட்டும் நான் சென்றேனா என்றால் ஆம்.

போலீசார் விசாரணையில் எதிரிகள் மாணிக்கமும், அண்ணாமலையும் தேவிடியா பையா உன் மகனை கொன்று விட்டோம், அதே போன்று உன்னை கொல்லாமல் விட மாட்டோம் என்று என் மாமனாரை பார்த்து கூறினார் என்று போலீசார் விசாரணையில் சொன்னேன். என் கணவரை பிடித்து கொண்டதாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றும், அதனை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் நியாபகம் இல்லை. என் கணவரை யார் குத்தினார்கள் என்று எனக்கு தெரியாது என்றும், நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் குணசேகரனுடன் அடிக்கடி பேசக்கூடாது என்று திட்டி வந்தார் என்றால் சரியல்ல. அதன் காரணமாக என் கணவருக்கும், குணசேகரனுக்கு விரோம் இருந்து வந்தது என்றால் சரியல்ல.

ஒம்/- சரளா

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.